**கொலொன்ன பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கொலொன்ன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை கட்டிடத்தில் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்தல் மற்றும் களஞ்சியத்தை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,518,880 இனை மூலதனமாக்கியிருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை மூலதனமாக்க வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 198,300 மீளாய்வாண்டுக்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டிற்குரிய வருமானம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | அறவிட முடியாது என தீர்மானிக்கப்பட்ட மீளாய்வாண்டிக்குரிய நீர் கட்டணம் ரூபா 88,400 யினை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | ஆண்டு இறுதியில் உள்ளவாறான காசு புத்தகத்தின் மீதி ரூபா 7,709,270 ஆன போதும், நிதி நிலைமை கூற்றினுள் அது ரூபா 7,897,204 ஆக காட்டப்பட்டதால் ரூபா 187,934 ஆன வித்தியாசம் நிலவியது. | மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகள் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி கணக்கில் மீதி ரூபா 24,341,834 ஆன போதும், அத் திகதியில் மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி அட்டவணை பிரகார மீதி ரூபா 29,047,137 ஆனதில் ரூபா 4,705,303 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதி நிலைமை கூற்றில் காட்டப்படுகிற சொத்துக்கள் அதற்குரிய அட்டவணைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | 2017 ஆண்டு முதல் ரூபா 944,970 ஆன களஞ்சிய கடன் கொடுத்தோர் மிதியொன்று நிதிக்கூற்றுக்களில் நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்பட்ட போதும், அது தொடர்பாக விரிவான தகவல்கள் சபையிடம் இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்க மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 02 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | வகனங்களின் திருத்த வேலைகள் நாளாதுவரையாக செய்து எரி பொருள் பரிசீலனை செய்ய வேண்டும். | குறித்த வாகனங்களின் திருத்த வேலைகள் நிரைவடைந்தவுடன் எரி பொருள் பாவனை பரிசீலனையை மேற் கொள்கிறேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வருடத்தில் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாதிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை | சுட்டிக்காட்டப்பட்ட சுற்றறிக்கையை கற்று அதன் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவுத் திட்ட சுற்றறிக்கை | செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்காண வேண்டும். | தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட சுற்றறிக்கையை கற்று அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,057,885 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,140,777 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,146,200 | 1,087,543 | 971,681 | 253,228 | 952,000 | 983,154 | 1,027,574 | 214,672 |
| (ii) | வாடகை | 6,016,600 | 4,216,735 | 4,215,682 | 187,159 | 4,404,814 | 4,435,691 | 4,255,369 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,129,475 | 1,407,846 | 1,407,846 | - | 1,032,900 | 1,076,893 | 1,076,893 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,510,525 | 8,869,161 | 8,908,142 | 7,352,071 | 8,753,225 | 9,643,820 | 10,713,656 | 8,905,259 |
| | | 18,802,800 | 15,581,285 | 15,503,351 | 7,792,458 | 15,142,939 | 16,139,558 | 17,073,492 | 9,119,931 |

2.2.2 **ஏனைய வருமானங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 251,793 ஆனதுடன், அவற்றில் ரூபா 16,698 தொகை 03 ஆண்டுகளை விஞ்சிய நிலுவை கட்டணமானது. | நிலுவை நீர் கட்டணத்தை தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 ஆண்டுகளை விஞ்சிய நிலுவை கட்டணத்திற்குரிய நிர் விநியோகம் தூண்டிக்கப்பட்டுள்ளதாகவும், காணப்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

2.2.3 **நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,634,072 ஆனதுடன், 2015 ஏப்ரில் முதல் 2019 ஜுன் வரை காலத்திற்குரிய அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 484,700 ஆனது. | சபைக்கு பெற வேண்டிய வருமானத்தை தாமதயின்றி அறவிட வேண்டும். | நீதி மன்றத் தண்டப்பணம் தற்போது கிடைத்துள்ளதாகவும், முத்திரைக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 வருடாந்த பாதீட்டின் மூலம் அதிகார எல்லையில் பாதைகளை மேம்படுத்த மாகாண சபை, பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சபை நிதியங்களினால் ரூபா | வருடாந்த பாதீட்டின் மூலம் அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து செயற்படுவதற்கு | பெறும்பாளான அபிவிருத்தி செயற்பாடுகள் மாகாண சபையினால் மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீட்டின் பிரகாரம் நிரைவேற்ற எதிர்பார்ப்பதால் அவைகளை |

| | | |
|---|---|---|
| 13.35 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் எதனையும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக திட்டவட்டமாக இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டும். | நேரகாலத்துடன் திட்டவட்டமாக இனங்காண்பது கடினமானது என அறிவிக்கிறேன் |

(ஆ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் சபைக்கு இயலாமலிருந்தது. | ஒதுக்கீடு ஏற்படுத்திக்கொண்டு உத்தேசிக்கப்பட்ட கழிவு பொருள் முகாமை கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைசின் ஒதுக்கீடு கிடைத்த பின்னர் கொம்போஸ்ட் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதாகவும் தற்போது உக்கலடையும் மற்றும் உக்கலடையா கழிவுகளை வெவ்வேறாக ஒன்று சேர்த்து உக்கலடையா கழிவுகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் செயலாளர் பதவி, தொழில்நுட்ப அலுவலர் பதவி மற்றும் வருமான அசிசோதகர் பதவி வெற்றிடங்களாக காணப்பட்டன. | முக்கியமான வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையில் காணப்படும் பதவி வெற்றிடங்களை தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் மாகான சபையிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையை புது கட்டிடத்திற்கு கொண்டு சென்றதன் பின்னர் பழைய சபை கட்டிடம் பயனுள்ள செயற்பர்டுகளுக்காக ஈடுபடத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டிடததை பயனுள்ள செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்த வேண்டும். | பழைய பிரதேச சபை கட்டிடத்தை எதிர்காலததில் பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த எதிர்பார்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையிற்கு சொந்தமான கெப் வண்டியொன்று மற்றும் 03 டெக்டர்களை திருத்த வேண்டியதனால் 03 ஆண்டிற்கும் 04 ஆண்டிற்குமிடையிலான காலமொன்று ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாததுடன், சாரதி ஒருவரி இல்லாத காரணத்தால் சபையின் நீர் பவுசர் 2016 திசெம்பர் 30 முதல் விளைவற்று நிலவியது. | சொத்துக்கள் நாளாதுவரையாக பராமரிக்க வேண்டியதுடன், சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கெப் வண்டியை திருத்த வேலைகளுக்காக சபையின் நிதி ஒதுக்கீடு போதாமையினால் அதற்காக மாகாண சபையிடமிருந்து ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள மதிப்பீடு முன்வைக்கப்பட்டுள்ளதாவும், சாரதி வெற்றிடம் காரணமாக வாகனங்களை பயனுள்ளதாக பயன்படுத்த முடியாதுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.4 பெறுகைகள்

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நந்தனகம இலுக்பேலகொட பாதையை மண் வெட்டி அபிவிருத்தி செய்யும் வேலையை 2019 ஜுலை 02 ஆம் திகதி பூர்த்தி செய்து ரூபா 300,000 செலுத்திய போதும், 2019 நவம்பர் 22 ஆம் திகதியளவில் அப்பாதை கழுவிச்செல்லப்பட்டு குழிகல் ஏற்பட்டு வாகனமொன்று செல்ல முடியாத நிலைக்கு ஆகியுள்ளதால் செலவிடப்பட்ட தொகை பயனற்றிருந்தது. | சபை நிதியம் பயனுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடந்த காலத்தின் அதிக மழையுடன் கூடிய நிலைமையுடன் புற்கள் வளர்ந்திருந்த அப்பாதையை பிரதேச வாசிகளையும் பங்குபற்றச் செய்து வாகனமொன்று செல்லக் கூடிய நிலைக்கு மீண்டும் உருவாக்கியதாக அறவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1998 ஆண்டில் சபை நிதியத்திலிருந்து முற்பணமாக செலுத்தியிருந்த அங்கத்தவர் கொடுப்பனவு ரூபா 33,000 யினை தீர்த்திற்கொள்ள சபையிற்கு இயலாமலிருந்தது. | குறித்த முற்பணத்தை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபையினால் கிடைத்த ஆலோசனை பிரகாரம் மகா சபையிற்கு முன்வைக்கப்பட்டு அவ் முற்பனத்தை பதிவழிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |